

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (07.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேரூராட்சி, கிராம ஊராட்சி பகுதிகள் வாரியாக அனைத்து பகுதிகளிலும் சீரான மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம் வழங்க மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன், வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., வருவாய்த்துறை அரசு செயலர் திரு.சந்திரமோகன்,இ.ஆ.ப., வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பா.ஜோதி நிர்மலா சாமி இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் திரு.பாஸ்கரன்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.பிரகாஷ்,இ.ஆ.ப., மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.




கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலின் தாக்கத்தினால் கடலில் திசைமாறி சென்ற மீனவர்களை மீட்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலோர காவல்படை கப்பலில் சென்று மீனவர்களை தேடும் பணிகளில் ஈடுபட்ட கன்னியாகுமரி மீனவர்களிடம் கண்காணிப்பு அலுவலர்கள் இன்று (07.12.2017) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காணாமல் போன மீனவர்களை எளிதில் கண்டறிவது தொடர்பாக கலந்துரையாடினர்.